தினமலர்
மதுரை | வெள்ளி | 15.10.2021

சொல்கிறார்கள்



# குழந்தைகளை நல்வழிப்படுத்தும்

**பொம்மலாட்ட கலைஞர் பத்மினி ரங்கராஜன்:** என் மகனுக்கு கதை சொல்வதற்காக இந்த கலையைக் கற்றுக் கொண்டேன். இந்த கலையைப் பயிற்றுவிப்பதுடன் பொம்மைகள் வாயிலாக கதை சொல்லியாகவும் இருக்கிறேன்.

ஆரம்ப காலத்தில் அக்கம் பக்கத்து குழந்தைகளுக்கு மட்டுமே கதை சொல்லி வந்தேன். ஒருமுறை என் மகனின் பள்ளியில் கதை சொல்லும் வாய்ப்பு கிடைத்தது.

அப்போது ஒரு குழந்தை 'நீங்க பயன்படுத்துற குரங்கு பொம்மையின் பெயர் என்ன' என்று கேட்டது. அந்த கேள்வி என்னை சிந்திக்க வைத்தது.

பொம்மலாட்டக் கலைஞர்களை சந்தித்து பொம்மைகளுக்குப் பெயர் வைத்து முறைப்படி கதை சொல்ல கற்றுக் கொண்டேன்.

விலை அதிகமான பொம்மைகளை தான் கதைகளுக்கு பயன்படுத்தணும்னு அவசியமில்லை; பேப்பர் பொம்மைகளை கூட பயன்படுத்தலாம். குழந்தைகளை ஈர்க்கும் வகையில் கதை சொல்வது தான் முக்கியம்.

அதனால் 15 ஆண்டுகளாக உபயோகம் இல்லாத பொருட்களை வைத்து தான் பொம்மைகளை செய்கிறேன்.

ஆசிரியர்களிடம் குழந்தைகளுக்கு பொம்மைகளை வைத்து எப்படி கதை சொல்வது என்று பயிற்சி அளித்து வருகிறேன்.

'ஸ்பூர்த்தி தியேட்